Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

செயலட்டை 33 | பாடம்:- வணிகக்கல்வி | தரம்:13


தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)

இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்


வாரம் 01

01.12.2021 – 05.12.2021

# மாதிரி வினாக்கள்

1. சார்க் வலய பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் கீழ் செயற்படும் இரு துணை அமைப்புகளையும் பெயரிடுக.

2. சூதாட்டம் பந்தயம் போன்ற ஒப்பந்தங்களில் இருந்து காப்புறுதி ஒப்பந்தத்தை வேறுபடுத்தும் தத்துவம் எது?

3. பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பு முறையில் இரண்டாம்தர சந்தையில் கொடுக்கல் வாங்கல் தீர்ப்பு முறைகள் இரண்டினை தருக.

4. பங்குடமை ஒன்றில் நீதிமன்ற கட்டளை ஏதாவது நிகழ்வின் காரணமாக கலைக்கப்பட முடியும். அவ்வாறான இரு நிகழ்வுகளை குறிப்பிடுக.

5. இலங்கை மத்திய வங்கியின்  மூன்றாம் நிலை உற்பத்திக்கான பாகுபாட்டின் துறைகள் ஆறினை குறிப்பிடுக.

6. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சர்வதேச வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு ஊக்கப்படுத்தல்களை வழங்கும் பிரதான நிறுவனம் எது?

7. அரசாங்க முதலீட்டு சாதனங்களில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பு முறைகளை நவீனமயமாக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தியுள்ள இரு முறைகளும் யாவை?

8. பொருளாதார சூழல் காரணிகள் சிலவற்றினை குறிப்பிடுக.

9. பொருட்களை கொள்வனவு செய்யும் போது கொள்வனவுக்கு வழங்கும் பற்றுச்சீட்டு ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

10. இலங்கை ஏற்றுமதிகள் இறக்குமதிகள் மீதான தீர்வுகளை சேகரிக்கும் நிறுவனம் எது?